Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 8 (20-5-66) இதழ் 102

பராபவ வைகாசி 7, முஹர்ரம் 28 வெள்ளிக்கிழமை

பட்டு உடைகளை சாயம் போடுவதும் ரைக்கிளீன் செய்வதும்



சன்லைட் டையேர்ஸ் அன் ரைக்கிளீனேர்ஸ்
(ராணித்தியேட்டருக்கு அருகாமை)
பெரியகடை யாழ்ப்பாணம்.
போன்: 474. தந்தி: ரைக்கிளீன்

### புதிய தளபதி பதவிநீக்கம்

சைகோன், மே 19
கிளர்ச்சிக்காரர்களைத் தாக்க மறுத்தது காரணமாக டானுங்குக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட தென்வியட்னும் தளபதி ஜெனரல் காவை, பிரதமர் கீ பதவி நீக்கம் செய்தார். இவரை நியமித்ததும் பிரதமர் கீ என்பது குறிப்பிடத்தக்கது.

# வடக்கு, கிழக்கு மீனவர் கஷ்டநிவாரணம்

## சரித்திரத்தில் பொறிக்கவேண்டிய தமிழாராய்ச்சிமகாநாடு

### நீதியரசர் தம்பையா பேச்சு

யாழ்ப்பாணம், வெள்ளி
'பல நாட்டுக்கொடிகளும் பட்டொளி வீசிப்பறக்க அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாடு மாற்றுமொழி பேசும் மலேசிய நாட்டுப் பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்று தங்கத் தமிழில் தமது உரையை 'கணீர்' என்ற குரலுடன் ஆரம்பித்துவைத்த அந்த கோலாகலமான விழா சரித்திரத்தில் பொறிக்கப்படவேண்டிய நிகழ்ச்சியாகும்'

நேற்று மாலை யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் மலேசிய தமிழாராய்ச்சி மகாநாட்டில் கலந்துகொண்ட நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையாவுக்கும் வித்துவான் பொன். முத்துக்குமாரனுக்கும் இலங்கை கம்பன் கழகம் அளித்த தேநீர் விருந்தின்போது நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

மலேசியா பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் விழாவை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில், தமது நாட்டில் மலாய் மொழி உத்தியோக மொழியாக இருந்தபோதிலும், தமிழ் மொழி எந்த விதத்திலும் குறைந்துபோய் விடவில்லையென்றும், சாதி பேதமின்றி ஒற்றுமையாகவே வாழ்ந்துவருகிறோம் என்று கூறியது கேட்பதற்குப் பெருமையையும், மகிழ்ச்சியையும் அளிக்கக் கூடியதாகவிருந்தது.

முதல் சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் ஆகிய மூன்று சங்கங்களிலும் கடைச்சங்கம் என்ற ஒன்று இருந்ததைத்தான் நம்பியிருந்தேன். ஆனால் மலேசியா நாட்டு அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாட்டில் கலந்துகொண்டபிறகு முதல் சங்கமும், இடைச்சங்கமும் இருந்திருக்கிறதென்பதை நம்பமுடிந்தது.

பரதநாட்டியத்தைப் பற்றி ஒரு பெண்மணி மிகவும் அழகாகவும் விளக்கமாகவும் சொன்னார். பரத

(6-ம் பக்கம் பார்க்க)

## ராஜரத்தினவுடன் எஸ். ஜே. வி, அமிர்தலிங்கம் பேச்சுவார்த்தை

### மீன்பிடித் துறைமுகம்பற்றியும் ஆலோசனை

கொழும்பு, வியாழன்
மீன்பிடி கூட்டுத்தாபன தலைவர் திரு. கே. எம். பி ராஜரத்தினவை இன்று தமிழரசுக் கட்சித்தலைவர்கள் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும் திரு. ஏ. அமிர்தலிங்கமும் நேரில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் மீன்பிடி தொழில் சீரமைப்புப் பற்றியும், மீனவர்களின் கஷ்டநிலைமை பற்றியும் இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது கருத்துப் பரிமாறல் நடைபெற்றுள்ளன.

திருவாளர்கள் செல்வநாயகமும், அமிர்தலிங்கமும் திரு. ராஜரத்தினவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் சுமுகமான சூழ்நிலையில் நடைபெற்றதாகவும், திரு. ராஜரத்தின தமிழ் எம். பி.க்களின் கருத்துக்களை மிகவும் கவனமாகக் கேட்டதாகவும் தெரிகின்றது.

1964-ம் ஆண்டு டிசம்பரில் ஏற்பட்ட கடும் புயலின் போது வீடுகளையும், வள்ளங்களையும், மற்றும் மீன்பிடி சாதனங்களையும் இழந்துவிட்ட மீனவர்களின் கஷ்டங்களைப் பற்றி திரு. ராஜரத்தினவிடம் எடுத்துக் கூறப்பட்டதாகவும் இந்த மீனவர்களுக்குக் கொடுக்கப்படும் கஷ்டநிவாரணம் பற்றாக் குறையாகவிருப்பது சுட்டிக்காட்டப்பட்டதாகவும் மீன்பிடி கூட்டுஸ்தாபன பேச்சாளர் ஒருவர் கூறினார். புயலின் போது நஷ்டங்களுக்குள்ளான மீனவர்களுக்கு அளிக்கப்படும் நிவாரணம் போதவில்லை என்று திரு. இரத்தினம் எம். பி. புகார் செய்திருந்தார். இந்த மீனவர்கள்

(6-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்தில்

## சைக்கிள் திருடர் நடமாட்டம்

### 'சைக்கிள்களைப் பூட்டாது வைக்கவேண்டாம்'

யாழ்ப்பாணம், வெள்ளி
சைக்கிள் திருடர்களிடமிருந்து உங்களது சைக்கிள்களைப் பாதுகாக்குமாறு யாழ்ப்பாணம் பொலிஸார் கோரியுள்ளனர்.

யாழ்ப்பாணம் பகுதியில் சைக்கிள் திருடர்களின் நடமாட்டம் மீண்டும் அதிகரித்திருக்கிறதென்றும் இதற்கு பொதுமக்களின் கவலையீனமும் ஒரு காரணமென்றும் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி யாழ்ப்பாணம் பொலிஸ்நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் எஸ். சௌந்தரநாயகம் தெரிவிக்கையில் சைக்கிளைப் பூட்டாமல் பொது வீதிகளிலும் பகிரங்கமான இடங்களிலும் வைப்பதால் சைக்கிள் திருடர்களுக்கு மிகவும் சுலபமாக இருக்கிறதென்றும் சைக்கிளைப் பூட்டாமல் வைக்கவேண்டாமென்றும் கூறினார்.

## சுதந்திரகட்சி எம். பி. க்கள் சிலர் அதிருப்தி

### அரசாங்கக் கட்சியில் சேரலாம்

கொழும்பு, வியாழன்
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சில எம். பி.க்கள் அரசாங்கக்கட்சியில் சேரக்கூடுமென்று அரசியல் வட்டாரங்களில் ஹேஷ்யம் நிலவுகின்றது.

ஜூலை — ஆகஸ்ட் மாத காலத்தில் பார்லிமெண்டில் வரவுசெலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடைபெறும் சமயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மேற்படி அங்கத்தவர்கள் அரசாங்கக் கட்சியில் சேர்த்துக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுசம்பந்தமாக சுதந்திரக்கட்சியின் முன்னாள் மந்திரியொருவர் அரசாங்க கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியதாகவும் சுதந்திரக்கட்சிக்கொள்கை பற்றி அவர் அதிருப்தி தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த முன்னாள் மந்திரியின் ஆதரவு எவ்வளவுக்கு சுதந்திரக்கட்சியைப் பாதிக்கும் என்பது சுதந்திரக்கட்சியின் வருடாந்த மகாநாட்டின்போது தெரியவரலாம். அவசரகாலநிலைமை காரணமாக இம் மகாநாடு சென்ற மாதம் பின்போடப்பட்டது. சென்ற ஆண்டுவரை செலவுத் திட்ட விவாவதத்தின் போது திஸமஹாரகம எம். பி திரு சார்ஸ் எதிரிசூரியா சுதந்திரக்கட்சியிலிருந்து வுலகி அரசாங்க கட்சியில் சேர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'பாகிஸ்தானுடன் எந்த மட்டத்திலும் பேசத்தயார்'

### டாஷ்கண்ட் ஒப்பந்த அமுல் பற்றி இந்திரா காந்தி

புதுடில்லி, மே 19
டாஷ்கண்ட் ஒப்பந்தத்தை அமுல் நடத்துவது சம்பந்தமாக பாகிஸ்தானுடன் எந்த மட்டத்திலும் பேச்சு நடத்த இந்தியா தயாராய் இருக்கிறது என ஸ்ரீமதி இந்திராகாந்தி கூறினார்.

இன்றுகாலை நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் அவர் பேசியபோது சமீபத்தில் அயூப்கான் இந்தியாவுடன் சமாதானம், நட்புறவுபற்றிப் பேசியிருக்கிறார் எனக் குறிப்பிட்டார். சீனா உட்பட எவருடனும் சமாதானம்பற்றிப்பேச இந்தியா தயாராய் இருக்கிறது என ஸ்ரீமதி காந்தி கூறினார்.

அணு ஆயுத சக்தியற்ற நாடுகளுக்கு அணு நாடுகளின் பாதுகாப்புப்பற்றிக் கேட்டபோது, இவ்விஷயமாகக் காலஞ்சென்ற திரு சாஸ்திரி மேற்கொண்ட முயற்சி உருப்படியான பலனை அளிக்கவில்லை என்றும் உரியவகையில் இந்தியா இவ்விஷயத்தில் செயல்படும் என்றும் கூறினார்.

## லங்கா ஜாதிக குருசங்கத் தலைவர் வேலைநீக்கம்

கொழும்பு, வெள்ளி
பிரபலதொழிற்சங்கவாதி லங்கா ஜாதிக குருசங்கத்தின் தலைவர் திரு. டி. பீட்டர் சில்வா ஆசிரிய சேவையிலிருந்து வேலைநீக்கம்செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருட பொதுத் தேர்தலில் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றத்துக்காக இவர் மீது இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக இதுவரை பதினைந்து ஆசிரியர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்ட 200 ஆசிரியர்கள் குறித்து விசாரணைகள் நடைபெற்றுள்ளன.

பொதுத் தேர்தலில் போட்டியிட்டும் அபேட்சகர்களை ஆதரித்து பல அரசியல் பொதுக்கூட்டங்களில் தொடர்ச்சியான உரை நிகழ்த்தியதன்மூலம் நிர்வாக சட்டங்களை மீறியிருப்பதாக இவர்மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

## எழுது[illegible]னைஞர் சங்க 5-வது வருடமகாநாடு

யாழ்ப்பாணம், வெள்ளி
அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் 5-வது வருடாந்த மகாநாடு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் ஜூன் மாதம் 9-ம் திகதி நடைபெறவிருக்கிறது இந்த மகாநாட்டில் பல மாகாணங்களில் வேலைசெய்யும் அரசாங்க ஊழியர்கள் பிரதிநிதிகளாக் கலந்துகொள்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

வெறுப்புக்கிடையே அன்புடனும், பேராசைக் கிடையேஆசையற்றும் இருப்பதே இன்பத்துக்கு வழி. சாந்தியை விரும்புபவர் வெற்றி தோல்விகளைப்பற்றிக் கவலைப்படமாட்டார்கள்.

—புத்தர் பெருமான்


# ஈழநாடு

ELA NADU; National Tamil Daily
Telegrams: EELA NADU Jaffna.

ஈழ் பாணம் பராபவ ஆண்டு வைகாசி மீ 7 உ (20-5-66)


## கட்டாய நாடு கடத்தல்?

நமது கொழும்பு நிருபர் நடராஜா நேற்று அனுப்பிய ஒரு பிரத்தியேகச்செய்தியில் நாடற்றவர்கள் விஷயமாக இலங்கை அரசாங்கம் தயாரித்துள்ள ஒரு நகல் மசோதாவில் அடங்கிய சில பாரதூரமான யோசனைகளைத் தெரிவித்துள்ளார். இதன்படிகட்டாய நாடு கடத்தல் நடவடிக்கையும் எடுக்கப்படலாமென்று தோன்றுகிறது. இது உண்மையாயின், அடிப்படை மனிதஉரிமை சாஸனத்துக்கு இது மாறுவதுடன், தலைவலிபோய் திருகுவலி வந்ததுபோல் இப்போதுள்ள இலங்கை இந்தியர் பிரச்னை அதிக சிக்கலாகி, மனக்கசப்புகள் அதிகரிக்குமோ என்று அஞ்சவேண்டியுள்ளது.

பல்லாண்டுகளாகவளர்க்கப்பட்டு வந்துள்ள இலங்கை இந்தியர் பிரச்னையைத் தீர்க்க ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி இலங்கையிலுள்ள நாடற்றவர்களில் மூன்று லட்சம் பேருக்கு இலங்கையில் பிரஜா உரிமை அளிப்பதென்றும், ஐந்தேகால் லட்சம்பேர்களை இந்தியா ஏற்பதென்றும் மற்ற ஒன்றரை லட்சம் பேர்களின் தலையெழுத்தைப் பற்றி பின்னர் தீர்மானிக்கலாமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த யோசனைகளை அமுலுக்குக்கொண்டுவர புதிய மசோதா கொண்டுவரப்படுகின்றது.

முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ, இந்த ஒப்பந்தத்தைச்செய்ததால் இம்மசோதாவை இலங்கை பார்லிமெண்டில் அவரும் அவரது கட்சியினரும் எதிர்ப்பதற்கில்லை. ஆனால் ஐந்துலட்சம்பேர்களை இந்தியாவுக்கு எப்படித் திருப்பி அனுப்புவது என்பதே முக்கிய பிரச்னை. அவர்களில் ஒரு பகுதியினர் இந்தியா திரும்ப மிக ஆவலுடனிருப்பதாயும், அவர்களுக்கு இந்திய ஹைகமிஷன் இந்திய பிரஜாவுரிமை வழங்கிவருவதாகவும் தெரிகிறது. ஆனால் இந்தியாவே தெரியாதவர்களும், எவ்வித ஆதரவுமின்றியும் இருப்பவர்கள் அங்கு செல்லத் தயங்குவது இயற்கை. இங்கு நாடற்றவர்களாகத் தொடர்ந்து இருக்க முடியாதபடி அதிக நிர்ப்பந்தங்களுக்கு அவர்கள் உள்ளாக்கப்படவும் கூடும்.

சர்வதேச தொழில் சங்க விதிப்படி ஒரு நாட்டிலே ஒரு தொழிலாளி ஐந்துவருட காலத்துக்கு மேல்வசித்து உழைப்பின், அவர்கள் அந்நாட்டின் பிரஜைகளாகி சரிசமமான உரிமை பெற்றவராகவேண்டும். அந்த அடிப்படையில் பார்த்தால், இலங்கையில் நாடற்றவரென்று கூறப்படும் இந்த ஒன்பதேமுக்கால் லட்சம் பேரும் இலங்கையில் பிரஜைகளாகி தொடர்ந்துவசிக்க உரிமை பெறுவர். ஆனால் இலங்கை அந்த விதிகளை உத்தியோக பூர்வமாக இன்னும் ஏற்காததால் இலங்கை அரசாங்கம் அதன்படி காரியம் செய்யக் கடமைப்படவில்லை என்று கூறப்படுகிறது.

இ... எப்படியாயினும் இந்த ஒப்பந்தம் அமுல் செய்யப்ப... இருப்பதால், கூடுமானவரை அந்த துரதிருஷ்ட மக்களுக்கு இம்சையில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது இந்தியா, இலங்கை இவ்விரு அரசாங்கங்களின் முக்கிய கடமை.

இலங்கையை விட்டுச் செல்ல, அவர்களுக்குத் தூண்டுதலாக சில சலுகைகள் அளிக்கப்பெறலாமென்று முன்னர் ஒரு யோசனை இருந்தது. இந்தியாவும் இலங்கையிலிருந்து வருபவர்களை அகதிகள் போல்கருதி, அவர்களுக்கு விசேஷ உதவிகள் அளிக்கவும் சம்மதித்திருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அரசியல் உரிமையற்று, நாடற்றவர்களாக, கண்யமாக ஜீவிக்க வழியின்றித்தவிப்பதைவிட, எங்காவது மானத்துடன் தலைநிமிர்ந்து வாழவே அவர்கள் விரும்புவர். இது மனிதர்களைப் பற்றிய விஷயம். அவர்கள் இந்நாட்டுக்கு எவ்வித குற்றமும் செய்யவில்லை. இதற்கு மாறாகத் தங்கள் உடல் உழைப்பால் இங்கு உணவு முதலியவற்றை உற்பத்தி செய்து, நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்க தயாராகவுள்ளனர். இவ்வித உழைப்புச் செல்வத்தை இழப்பது நாட்டுக்கு நல்லதல்லவாயினும், இன்றைய நிலையில், இதை தேசிய அரசாங்கமும் காதில் வாங்குவது சந்தேகமே.

என்றாலும் கட்டாய நாடு கடத்தல் கூடாதென்று இங்கு பொதுவாகத் தமிழ்ச் சமூகத்திடையே கருத்து நிலவுகின்றது. தொழிற் சங்கங்களும் கட்டாய நாடு கடத்தலை ஆதரிக்காது. ஆகவே சிக்கலான இவ்விஷயத்தில் மனிதாபிமானத்துடனும் அன்புடனும் காரியங்கள் செய்வதன் மூலமே இதைச் சுமுகமாகத் தீர்க்க முடியும். ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற கொள்கையை உடைய தமிழர், உலகில் எங்கு சென்றாலும் உண்மையாக உழைத்து நண்பர்களாக வாழத் தயாராக இருப்பர். ஆனால் அப்பேர்ப்பட்டவர்களை வீண் இம்சைகளுக்கு உள்ளாக்காமல், கூடுமான தூண்டுதல்களை அளித்து கண்யமாக நடத்த வேண்டியது இரு அரசாங்கங்களின் மேலான கடமை.

### நியமனம்

கொழும்பு, வியாழன்

திருவாளர்கள் என். குமாரசிங்கம், எல் ரஸ்டம்பி, வி. ஜி. பி. பெரரா, சி. டி. சில்வா ஆகியோரை மகாதேசாதிபதி ... போக்குவரத்து சட்டத்தின் ... ளார்.

கச்சதீவு விவகாரம்

# யாருக்குச் சொந்தம் என்ற பிரச்னை தீர்ந்தது

கச்சதீவு எங்கே இருக்கிறதென்று பூகோளப் படங்களைப் புரட்டினால் தோல்விதான் கிடைக்கும். சாதாரண பூகோளப் படங்களில் அது குறிக்கப்படவில்லை. ஆகாயவிமான சேவைகள் ஆகாயத்திலிருந்து எடுக்கும் படங்களில் ஒரு வேளை அதைக் காணக்கூடும். இல்லாவிட்டால் நேரில் சென்றுதான் அதைப் பார்த்துக் கொள்ள வேண்டும்!

ஆழ்கடல் மீன்பிடிப்பவர்கள் அதை அறிந்திருப்பார்கள். மற்றவர்கள் அங்கே போவதற்கு எவ்வித முகாந்திரமுமில்லை. அது ஒரு நிர்மானுஷ்யமான பாலைவனத் தீவு. அங்கே அடம்பன் கொடியையும் இராவணன் மீசையையும் தவிர வேறு தாவர வர்க்கங்கள் கிடையாது. குடிப்பதற்கு நல்ல தண்ணீர்கூட இல்லை. ஆனால் வருடத்தில் ஒரு முறைமட்டும் பங்குனி மாதத்தில் சில நாட்கள் ஆயிரக்கணக்கான ஜனங்கள் அங்கே கூடுவார்கள். அங்குள்ள அர்ச். அந்தோனியார் கோயில் ஒன்றுதான் இதற்குக் காரணம்.

இக்கோயிலின் பூர்வீகம் சரித்திர இருளுக்குள் மறைந்து கிடக்கிறது. அதில் அந்தோனியார் வழிபாடு எப்பொழுது, எவ்வாறு, எவரால் ஆரம்பிக்கப்பட்டதென்று ஒருவருக்கும் தெரியாது. ஆனால் பல வருடங்களாக இந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் ஏராளமான கத்தோலிக்கர் குறிப்பிட்ட அந்தத் தினத்தில் தோணிகளிலும் வள்ளங்களிலும் கச்சதீவுக்குப் போய் வழிபாடு செய்துவருகிறார்கள். அச்சமயம் குடிநீர் முதற்கொண்டு சமையல் சாமான்கள், பெட்டி படுக்கைகள் அனைத்தும் வெளியூர்களிலிருந்தே கொண்டு செல்ல வேண்டும். இரு நாடுகளையும் சேர்ந்த கத்தோலிக்க ஸ்வாமிமார்களும் 1960-ம் ஆண்டுவரை விழாவில் கலந்து கொண்டார்கள்.

கச்சதீவு இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலுள்ள நடுக்கடலில் நெடுந்தீவிலிருந்து வடமேற்குப் புறமாக சுமார் பதினைந்து மைல் தூரத்தில் அமைந்திருக்கிறது. இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் விமானப் பிரயாணம் செய்பவர்களுக்கு அக் கடலின் பச்சைக்குள் ஒரு குவியல் சாணம் போலத் தெரியும். மீன்பிடிப்போரைத் தவிர கள்ளக்கடத்தற்காரரும் அதன் கேந்திர நிலையத்தை அறிந்த பயன்படுத்திக்கொள்வார்கள். இலங்கையின் பச்சைப் பாக்கும், சாராயமும், ரேடியோக்களும், கைக்கடிகாரங்களும் சுங்கவரிக்குத் தப்பி இந்தியாவுக்குப் போகும் வழியில் கச்சதீவு ஒரு வசதியான தங்குமிடம். இந்தியாவின் பட்டும், பவுனும், அபினும் அதன்மார்க்கமாக இலங்கைக்கு வந்து சேரும்.

அந்தோனியார் விழாக் காலங்களில் சட்டவிரோதமாக இலங்கைக்கு வந்து சேர விரும்புகிறவர்களுக்கும் கச்சதீவு அநுகூலமாயிருக்கிறது. சாதாரணமாக கப்பல்மூலமாகவோ விமானம் மூலமாகவோ இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் பிரயாணம் செய்பவர்கள் அனுஷ்டிக்க வேண்டிய கொள்ளை நோய் தடுப்பு விதிகளுக்கு கச்சதீவுமூலம் வருகிறவர்கள் கட்டுப்படுவதில்லை. இதன்பயனாகத் தொற்றுநோய் கிருமிகளும் வேண்டா விருந்தினர்களாக இலங்கைக்குள் சேர்ந்துவிடுகின்றன. கள்ளக்கடத்தல், சட்டவிரோதக் குடியேற்றம், தொற்றுநோய் இம்மூன்றையும் தடுப்பதற்காக வேண்டி கச்சதீவு யாருக்குச் சொந்தம் என்ற பிரச்னை சில வருடங்களுக்கு முன் எழுந்தது.

இது எழுந்தவுடனே இலங்கையிலுள்ள கத்தோலிக்க ஸ்வாமிமார் அரசாங்கத்துக்கு வீண் கரைச்சல் கொடுக்கப்படாதென்ற எண்ணத்துடன் கச்சதீவுக்குப் போவதை நிறுத்திவிட்டார்கள். அவர்களைப் பின்பற்றி அவர்களுடைய ஆலோசனையின்பேரில் இந்தியாவிலுள்ள குருமாரும் கச்சதீவுக்குப் போவதில்லை. அங்குள்ள சிறிய கோயிலில் அவர்களாலேயே கட்டப்பட்டதாகையினால் அதன் பராமரிப்பு வேலைகளையும் அவர்களே கவனித்து வருகிறார்கள்.

கச்சதீவு யாருக்குச் சொந்தமானது என்ற பிரச்னை இனிமேல் எழ வேண்டியதில்லை. பல நூற்றாண்டுகளாக அது இராமநாதபுரம் ஜாமீனுக்கே சொந்தமாயிருந்ததென்றும், தமது மூதாதையர்கள் அதை முத்துக்குளிப்பதற்கு உபயோகித்தார்களென்றும், பிரிட்டிஷ்கிழக்கிந்திய கொம்பனி பின்னர் அந்த உரிமையை எடுத்ததென்றும், விக்டோரியா மகாராணியார் அதை மீண்டும் தமக்களித்ததாகவும், ஜமீன்தாரின் ஒழிப்புத் திட்டத்தின்கீழ் இந்திய அரசாங்கம் தமது உரிமைகளை எடுத்துக் கொண்டபோது கச்சதீவு தமிழ்நாட்டரசாங்கத்துக்குச் சொந்தமாகிவிட்டதென்றும் இராமநாதபுரம் இராஜா சமீபத்தில் கூறியிருக்கிறார். முன்னாள் இலங்கை மந்திரிசபைக்காரியதரிசியாயிருந்த திரு. பி. பி. பீரிஸும் இக்கருத்தை ஆதரிக்கின்றார்.

(6-ம் பக்கம் பார்க்க)

## இன்று நிகழும் சூரிய கிரகணம்

இந்தியாவின் பல பாகங்களில் இன்று தெரியும் பார்சுவ சூரிய கிரகணம் இலங்கையில் தோற்றாது. பிற்பகல் 3-25 முதல் மாலை 5-56 வரை தோற்றப்படும் இக்கிரகணம் ஸ்ரீநகரில் 2 1/2 மணிநேரத்துக்கும் சென்னையில் 36 நிமிடங்களுக்கும் நிகழும். இதைத் தரிசித்து பாப சாந்தி செய்வதற்காக சுமார் 50,000 யாத்திரீகர்கள் குருக்ஷேத்திரத்தில் கூடியிருக்கிறார்கள். எட்டு சதுர மைல் விஸ்தீரணமான தீர்த்தக்கரையில் போக்கு வரத்துக்களை கட்டுப்படுத்துவதற்காக நூறு ஒலிபெருக்கிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதுகங்கண கிரகணமாகத் தோற்றும் கிரீஸ் தேசத்துக்கு உலகின் பல பாகங்களிலிருந்தும் விஞ்ஞானிகள் சென்றுள்ளார்கள். 1954-ம் வருடம் ஜூன் மாதத்தில் இலங்கையில் ஒரு பூரண சூரிய கிரகணம் தோற்றப்பட்டபோது உலகத்து விஞ்ஞானிகள் பலர் பொலனறுவை, ஹிங்குராகொடை முதலிய இடங்களில் பூதக்கண்ணாடிகளை அமைத்து அதைப் படம் பிடித்து அவதானித்தனர்.

# ஐயாறன் எழுதுவது

இன்று வெள்ளிக்கிழமை சூரியகிரகணம். இந்தியாவிலே பெங்களூருக்கு வடக்கேயுள்ள இடங்களில் தான் கிரகணம் தெரியுமாம். நம் இலங்கையில் இது தெரியாது.

சூரியகிரகணம் அமாவாசைகளிலேதான் வரும். அதன்படி பார்த்தால் இன்றுதான் அமாவாசை. ஆனால் இலங்கை அரசாங்கத்தின் போயா பஞ்சாங்கப்படி சென்ற புதன்கிழமையே அமாவாசை வந்துசென்றுவிட்டது. இன்று மூன்றும் பிறை! சூரியனுக்கு மட்டும் வாயிருந்தால் இதைக் கேட்டுச்சிரிப்பார். அவர் சிரிக்காவிட்டாலும் உலகம் நம்மைப் பார்த்துச் சிரிக்கும்.

'அபத்தப் பஞ்சாங்கத்துக்கு அறுபதிநாழியும் தியாச்சியம்' என்று ஒரு வசனமுண்டு. இலங்கையின் போயா பஞ்சாங்கம் அபத்தமானதென்பதற்கு இன்றைய கிரகணமே சரியான அத்தாட்சி. ஆகவே இதைப்பற்றி இலங்கை அரசாங்கம் புனராலோசனைசெய்து போயா தினங்களைச் சரியான நாட்களில் நிர்ணயித்து விடுமுறை விடுவது அவசியம்.

மல்வத்தை மகாநாயக்க தேரோ யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது, இதைப்பற்றி மாவிட்டபுரம் குருக்கள், அவரிடம் எடுத்துச்சொல்லி இந்துக் குருமார்களுடனும் இதைப் பற்றிக் கலந்து பேசி, சரியான நாட்களில் போயா விடுமுறைகளை விடச்செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதை அத்துடன் விட்டுவிடாமல் சூரியகிரகணம்' மூன்றும்பிறை' அன்று வரும் கேலிக்கூத்தை மகாநாயக்கா, பிரதமர் உள்நாட்டு மந்திரி முதலியவர்களுக்கு, இந்துக்குருமார்கள் எடுத்துசொல்லி, இவ்விஷயத்தைப் பற்றிப் புனராலோசனைசெய்து, அடுத்த வருடமாவது இவ்விதமான தவறுகள் திருத்தப்படப் பார்த்துக் கொள்ளவேண்டும். நாம் சொன்னால் அவர்கள் காதில் ஏறுமாவென்று மனம் குன்றி, மௌனமாக இராமல், பொதுநன்மையைக் கருதி இதில் சிறப்பாக இந்துக் குருமார்கள் முயற்சி எடுக்க வேண்டும்.

மகாநாயக்கதேரோ வடமாகாணத்தைப் பற்றி மிக நல்ல அபிப்பிராயம் கொண்டிருக்கிறார். இங்கிருந்து சில முக்கியமான இந்துக் குருக்கள்மார் அவருக்கு எழுதியும் நேரில் சென்று சந்தித்தும் பேசினால் நல்பலன் கிடைக்கமுடியும். 'மூன்றும்பிறை' யன்று சூரிய கிரகணம் வராதென்பது மகாநாயகாவுக்கும் தெரியும்தானே!

°° °° °°

சிவபெருமான் தம் முடிமீது சந்திரன் வைத்துள்ளதாகப் புராணம் கூறும். அது எத்தனையாம்பிறைச் சந்திரன்? மூன்றும் பிறை என்றுதான் இதுவரை நினைத்திருந்தேன். சில அன்பர்களைச் கேட்டதற்கு அவர்களும் மூன்றும் பிறை என்று கூறினர்.

ஆனால் காஞ்சிகாமகோடி பீடாதிபர் ஸ்ரீ சங்கராச்சாரியாரின் பிரசங்கத்தைப் படிக்கையில், இக்கருத்துதவறென்றும் எட்டாம்பிறை அதாவது அட்டமிச் சந்திரனையே தம் முடிமீது வைத்துள்ளதாகவும், அதனால்அட்டமிமிகப் புனிதமான நாளென்றும், அது வழிபாட்டுக்கு ஏற்றதென்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவரை 300க்கு மேற்பட்ட கப்பல்கள் பாதிப்பு

## பிரிட்டிஷ் மாலுமிகளின் வேலைநிறுத்தம் தொடருகிறது

### கடற்படையை உபயோகித்தால் பொது வேலைநிறுத்தம் என பயமுறுத்து

லண்டன், மே 19

பிரிட்டனில் வேலைநிறுத்தம் செய்திருக்கும்வாணிபக்கப்பல் மாலுமிகளுக்குப்பதில்,கடற்படையை உபயோகித்தால்பொது வேலைநிறுத்தம் ஆரம்பமாகும் என வேலை நிறுத்த யூனியன்கள் பொதுக்காரியதரிசி அரசாங்கத்தை எச்சரித்திருக்கிறர்.

62000 பாலுமிகள் கடந்த 3 தினங்களாக அங்கு அதிகச் சம்பளம், சிறந்த வேலை வசதி கோரி வேலைநிறுத்தம் செய்துவருகிறர்கள்.

இதனுல் 300க்கு மேற்பட்ட கப்பல்கள் இப்போது பாதிக்கப்பட்டிருக்கின்றன. வாரம் 300 கப்பல்கள் வீதம் படிப்படியாக மொத்தம் 2500 கப்பல்களை இது பாதிக்கும் எனக் கூறப்படுகிறது.

கடற்படையினரை உபயோகிப்பது பற்றி அரசாங்கம் ஆலோசிக்கவேண்டும் என்றும் யூனியன் தலைவர்கள் கூறியிரு கிருர்கள்.

# அணு சூன்ய பகுதிகள் நிறுவப்படல் வேண்டும்

## கொஸிஜின் - நாஸர் கூட்டறிக்கை

கெய்ரே, மே 19

உலகின் பல பகுதிகளில் அணுசூன்யப் பகுதிகள் ஏற்படுத்தப்படவேண்டும் என ரஷ்யப் பிரதமர் கொஸிஜினும், ஐக்கிய அராபியக் குடியரசுத் தலைவர் நாஸரும் கூறியிருக்கிறர்கள்.

வியட்னும்மீது அமெரிக்க குண்டு வீச்சு நிறுத்தப்படவேண்டும் என்றும், ஜெனிவா ஒப்பந்தப்படி வியட்னுமில் அமைதி நிலை நாட்டப்படவேண்டும் என்றும் அவர்கள் கூறியிருக்கிருர்கள்.

ரொடீஷியா சம்பந்தமாக பிரிட்டன் மேற்கொண்டு வரும் காலனி ஆதிக்கக் கொள்கைகளை இரு தலைவர்களும் கண்டித்திருக்கிருர்கள்.

பாலஸ்தீனிய அராபியர்களின் உரிமையை ரஷ்யப் பிரதமர் கொஸிஜின் ஆதரிப்பதாகக் கூறியிருக்கிறர்.

ரஷ்யப் பிரதமரின் 8 நாள் பிராயத்தின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது

திரு. கொஸிஜின் நேற்று மாஸ்கோ திரும்பினர்.

# வார இறுதிக்குள் திட்டவட்டமான யோசனை

## இந்தோனேஷியாவிலிருந்து கிடைக்கும் என்கிறர் துங்கு

பினங்கு, மே 19

இந்தோனேஷியாவுக்கும் மலேசியாவுக்குமிடையே அமைதிக்கான வாய்ப்பு சிறப்பாக இருப்பதாக மலேஸியப் பிரதமர் துங்கு அப்துல்ரஹ்மான் கூறினர்.

அவசியமானுல் தான் ஜனதிபதி சுகர்னேவைச் சந்தித்துப் பேசத் தயார் என்றும் அவர் கூறினர்.

நேர்முக அமைதிப் பேச்சுக்கு மசேியா முற்றும் ஆதரவளிப்பதாகக் கூறிய அவர் இந்தோனேஷியாவிலிருந்து வரும் பத்திரிகைச் செய்திகளை ஆதாரமாகக் கொண்டே தாம் இதைக் கூறுவதாயும் எனிலும் இவ்வார இறுதிக்குள் திட்டவட்டமான யோசனை இந்தோனேஷியாவிலிருந்து கிடைக்கும் என எதிர்பார்ப்பதாயும் குறிப்பிட்டார்.

## மீஸோ, நாகர்

ஷில்லாங், மே 19

மழைக்காலத்தில்மீஸோக்கள் பெரிய அளவில் குழப்பம் எதுவும் விளைவிக்கமுடியாது என்றும், ஆயுதம் தரித்த மீஸோக்கள் விரட்டப்பட்டு வருகிறர்கள் என்றும் அஸ்ஸாம் முதல்வர் திரு. சாலிஹா கூறினர்.

பிரதமருக்கும் பகைநாகர்களுக்குமிடையே அடுத்த சுற்று பேச்சுக்கு திகதி எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும் அவர் கூறினர்.

## ஐ.நா.வில் ரொடீஷியா

நியூயோர்க், மே 19

ஐ. நா. பாதுகாப்பு சபை நேற்று ரொடீஷியா பற்றி விவாதம் நடத்தியபோது பிரிட்டிஷ், அமெரிக்க பிரதிநிதிகள் நிதானத்தை வற்புறுத்தினர்கள்.

லண்டனி இப்போது பேச்சுக்கள் நடைபெற்று வருவதால், இவ்விஷயமாகத் தாமதம் காட்டுமாறு சபையை அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

ரஷ்யப் பிரதிநிதி பேசியபோது பிரிட்டன், அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகள் ஸ்மித்தின் வெள்ளை ஆட்சியை நிலைநாட்ட ஒன்றுசேர்ந்திருப்பபதாய்க்குற்றம் சாட்டினர்.

சபை இன்று மீண்டும் கூடும்.

## பாக் .ஊடுருவல்

கல்கத்தா, மே 19

50 பாகிஸ்தானியர் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்குவங்க கிராமம் ஒன்றில் புகுந்து வீட்டைக் கொள்ளையடித்து, ஆட்களைத் தாக்கியபின், 4 தடவை துப்பாக்கியால் சுட்டுவிட்டு, பல்லாயிரக்கணக்கான ரூபாய்பெறுமதியான பணத்தையும் [illegible]களையும் எடுத்துச் சென்றனர்.

தென்வியட்னும்

## 50 பௌத்தர்கள் உண்ணுவிரதம்

சைகோன், மே 19

தென் வியட்னுமிலுள்ள டானங் நகரில் பௌத்தர்களின் எதிர்ப்புவலுவடைந்திருக்கிறது.

சைகோனிலுள்ள பௌத்தர்கள் டானுங் பௌத்தர்களுக்கு ஆதரவளித்திருக்கிருர்கள்.

டானுங்கிலுள்ள பகோடாவில் 20 பிக்குகளும், 30 பிக்குனிகளும் டானுங் கைப்பற்றப்பட்டதை எதிர்த்து உண்ணுவிரதம் ஆரம்பித்திருக்கிருர்கள்.

பகோடாக்களில் 3000 கிளர்ச்சித் துருப்புகள் அரசாங்கத் துருப்புக்களுக்கு எதிராகச் சமர்புரிவதாக அறிவிக்கப்படுகிறது.

## ஹோசிமினுக்கு பிறந்ததின வாழ்த்து

ஹானேய், மே 19

வடவியட்னும் அதிபர் ஹோசிமின்னின் பிறந்த தினத்தையொட்டி இந்திய ஜனதிபதியும், பிரதமரும் வாழ்த்துச்செய்திகள் அனுப்பியிருக்கிருர்கள்.

வடவியட்னுமில் அமைதியும் செழிப்பும் ஏற்பட இந்திய அரசாங்கமும், மக்களும் விரும்புவதாக டாக்டர் ராதா கிருஷ்ணன் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியிருக்கிருர்.

ஸ்ரீமதிஇந்திரா அனுப்பிய செய்தியில் தமது முன்னுள் ஹானேய் விஜயத்தை நினைவு கூர்ந்து, வியட்னும் மக்களின் துன்பத்திற்கு சொந்தமுறையில் பரிவும் துயரும் அடைவதாகக் கூறியிருக்கிருர்.

டாக்டர் ஹோசிமின்னின் தலைமை வடவியட்னுமுக்கு இன்னும் பல்லாண்டுகள் கிடைக்க வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிருர்.

## அதிக உணவுக்கு அங்கீகாரம்

வாஷிங்டன், மே 19

தேவைப்படும் நாடுகளுக்கு அதிக உணவுத்தான்யங்களைவழங்கஅரசாங்கத்திற்கு அதிகாரம் வழங்கும் மசோதாவை, அமெரிக்க விவசாயக்கமிட்டி அங்கீகரித்திருக்கிறது.

## கல்வி நிபுணர் கூடுவர்

புதுடில்லி, மே 19

உத்தேச இந்திய—அமெரிக்க கல்விப் பணிபற்றி விவாதிக்க 25 கல்வித்துறை நிபுணர்கள் கூடுகிருர்கள். நாட்டில் இது குறித்து வாதப்பிரதிவாதங்கள்நடைபெறுவதால், இத்தகைய மகாநாடு ஒன்றை கல்வி மந்திரி கூட்டவிருக்கிருர்.

## மே 31-ல் பயணம்

கேப்கென்னடி, மே 19

ஒத்திவைக்கப்பட்ட 'ஜெமினி 9' விண்வெளிக் கப்பலின் பிரயாணம், இம் மாதம் 31-ம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

## சீனவுடன் தொடர்பு

வாஷிங்டன், மே 19

ராஜதந்திர வழியில் சீனவுடன் தொடர்பு கொண்டிருப்பதன் மூலம் யுத்த அபாயத்தை தவிர்க்கவேண்டும் என [illegible] மந்திரி [illegible] மாரா கூறினர்.

# கனேடிய பார்லிமெண்டில் வெடி குண்டு!

ஒட்டாவா, மே 19

நேற்று கனேடிய பார்லிமெண்டில், உள்நாட்டில் செய்யப்பட்ட ஒரு வெடிகுண்டு வெடித்தது.

அப்போது பார்லிமெண்ட் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது பிரதமரின் காரியாலயத்துக்கருகில் வெடித்த இக்குண்டின் விளைவாக ஒருவர் மாண்டார்.

இறந்தவர் பொது கலரியில் அமர்ந்து சபை நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இதன் காரணமாக பார்லிமெண்ட் சிறிது நேரம் ஒத்திவைக்கப்பட்டது.

# "வெடிகுண்டு வீச்சுக்கு நாங்கள் காரணமல்ல"

## பாகிஸ்தான் மறுப்பு

புதுடில்லி, மே19

காஷ்மீர் முதன் மந்திரி திரு.சாதிக் நேற்று பிரதமர் இந்திராவை இரு தடவைகள் சந்தித்துப் பேசினர்.

காஷ்மீரில் நிலைமை மாமூலாக இருப்பதாயும், ஆனல் பாகிஸ்தானிய சதிக்கெதிராக கண்காணிப்பு தொடர்ந்து அவசியமென்றும் திரு சாதிக் நிருபர்களிடம்பேசிய போது குறிப்பிட்டார்.

இதற்கிடையில் பாராமுல்லா வெடிகுண்டு வீச்சில் காயமடைந்தவர்களின்எண்ணிக்கை 50ஆக உயர்ந்திருக்கிறது. காயமடைந்த ஒவ்வொருவருக்கும் ரூபா 500 உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது,

இந்த வெடிகுண்டு வீச்சு சமபந்தமாக காஷ்மீர் முழுதும் பல கண்டனங்கள் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன.

பாகிஸ்தான், போர் வெறியை தோற்றுவிக்க இயன்றதையெல்லாம் செய்வதாயும், ஆனல் ஒற்றுமை இருந்தால் அதன் நோக்கம் நிறைவேருது என்றும் காஷ்மீர் கவர்னர் கரன்சிப் கூறினர்.

இதற்கிடையில் முதல்வர் சாதிக்கை நோக்கி வீசப்பட்ட குண்டுபற்றி, வேண்டுமென்றே இந்தியத் தலைவர்கள் தங்கள்மீது குற்றஞ்சாட்டுகிருர்கள் என்றும், பாகிஸ்தானுக்கு இதில் சம்பந்தம் எதுவும் கிடையாது என்றும் பாகிஸ்தான் கூறியுள்ளது.

''ஈ. வெ. ரா மூலம்

# காமராஜர் வகுப்புத்துவேஷ பிரசாரம் செய்கிறர்''

## ம. பொ. சி. தாக்கு

மேலூர், மே 19

''கொஞ்சக்காலமாக திரு. காமராஜர், பெரியார் ஈ. வே.ரா.வைப் பயன்படுத்திக்கொண்டு பிராமணர்-பிராமணர் அல்லாதார் மீது வகுப்புத்துவேஷத்தை தூண்டிவிட்டுக்கொண்டிருக்கிறர்'' என தமிழரசுக்கழகத் தலைவர் ம. பொ. சிவஞானக்கிராமணியார் கண்டனம் தெரிவித்தார்.

''காமராஜர் முதன்மந்திரியாக இருந்தபோது வகுப்புவாதப் பிரசாரம் செய்ததேயில்லை. நேருவும், காங்கிரஸ் மேலிடமும் என்ன சொல்லுமோ என்ற பயத்தில் அப்படிச் செய்யாமலிருந்தார். ஆனல் அவரே இப்போது காங்கிரஸ் அக்கிராசனராக இருப்பதால், தான் என்ன வேண்டுமானலும் சொல்லலாமென்றும், பிராமண எதிர்ப்புப்பிரசாரம் செய்யலாமென்றும் நினைக்கிறர்'' என்றும் ம. பொ. சி. கூறினர்.

காங்கிரஸ் அரசாங்கத்தின் உணவுக் கொள்கை, தங்கக்கட்டுப்பாடு, மதுவிலக்கு ஆகிய யாவும் படுதோல்வியடைந்துவிட்டன. பொதுத்தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கிறது. மீண்டும் பதவிகளைப் பிடிக்க வேண்டுமென காங்கிரஸ்காரர்கள் ஆசைப்படுகிறர்கள். ஆனல் பாமரமக்களை ஏமாற்றுவதற்காக இவற்றையெல்லாம் நீக்கிவிடுவதாக இப்போது சொல்கிறர்கள். காங்கிரஸ் அரசாங்கத்தை மாற்றி மக்களுக்குப் பிடித்தமான ஒரு அரசாங்கத்தை ஏற்படுத்த எதிர்க்கட்சிகள் ஒன்றுபட வேண்டும். ஆளுங்கட்சியினர் எப்படி அதிகார துஷ்பிரயோகம் செய்தார்கள் என்பதை மக்களுக்கு விளக்கிச் சொல்லவேண்டும் என்றும் சிவஞானம் குறிப்பிட்டார்.

திரு காமராஜர் வகுப்புத்துவேஷத்தைத் தூண்டிவருகிறரென்பதை மக்களுக்கு உணர்த்தவேண்டும். எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்குத் தேர்தலில் பெரும்பான்மை கிடைத்தால் நிலையான அரசாங்கம் அமைக்கமுடியுமென்றே நம்புகிறேன்.

முதன்முதலாக யூனியன் மந்திரிசபை அமைக்கப்பட்டபோது காங்கிரஸில் இல்லாத திறமைசாலிகளும் மந்திரிசபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அதேபோல் தி. மு. க.வும் அரசாங்கத்தை நடத்தத் திறமைசாலியான வெளியார்களைச் சேர்த்துக்கொள்ளலாம். தி. மு. க.வுக்கு நல்ல ஆதரவிருக்கிறது. மற்றக் கட்சிகளுடன் கூட்டுச்சேராமல் தனியாகவே அவர்கள் தேர்தலில் போட்டியிடமுடியும். ஆனல் மற்றக் கட்சிகளுடன் கூட்டுச்சேர்ந்தால் இன்னும் அதிக ஸ்தானங்கள் அவர்களுக்குக் கிடைக்கும் என்றும் ம, பொ சி. தொடர்ந்து கூறினர்.

## 'இடமாற்றத்தை ரத்துச்செய்க'

அகங்கம, வியாழன்

வெலிகம நகரசபை வெலிகம உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையின் இடமாற்றத்தை ரத்து செய்யும்படி பொலிஸ் அதிபரைக் கேட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்வியின் தரம் உயர்ந்திருக்கிறது; ஆனால் ஆங்கிலத்தின் தரம் குறைந்துவிட்டது

## கல்விக் கருத்தரங்கில் அபிப்பிராயம்

சாவகச்சேரி, வியா.

அண்மைக் காலத்தில் கல்வியின் தரம் உயர்ந்திருக்கிறது என்றும், சுயபாஷைகள் போதனமொழியாக்கப்பட்ட பின்னர் ஆங்கிலத்தின் தரம் மட்டுமே குறைந்திருக்கிறது என சாவகச்சேரியில் நடைபெற்ற கல்வி வளர்ச்சி பற்றிய கருத்தரங்கில் பொதுவான அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற கல்வி வளர்ச்சி பற்றிய கருத்தரங்கொன்றில் சொக்குவில் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. ஹண்டி பேரின்பநாயகம், பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் திரு. கு. நேசையா, திரு. ஏ. எஸ். கனகரத்தினம் ஆகியோர் பங்குபற்றினர்.

திரு. ஹன்டி பேரின்பநாயகம் தமது கருத்துரையில் தெரிவித்ததாவது:

''கல்வியின் தரம் குறையவில்லையென்றுதான் நான் கூறுவேன். ஆங்கிலப் பாடத்தில் மட்டும்தான் தரம் குறைந்திருக்கிறது.

ஆசிரியருடன் மாணவர் எவ்வளவு நெருங்கித் தொடர்பு கொள்ளுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களின் அறிவு வளர்ச்சியடைகிறது.

ஐம்பது மாணவர்களைக் கொண்ட ஒரு வகுப்பில் படிக்கும் மாணவனுக்கும், இருபத்தைந்து மாணவர்கள் படிக்கும் வகுப்பில் பயிலும் மாணவனுக்கும் ஆசிரியரின் தொடர்பு கூடியும் குறைந்தும் இருக்கும். கல்வித்தரம் குறைவதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும்.''

திரு. நேசையா தனது கருத்துரையில தெரிவித்ததாவது:

''கல்வித்திட்டம் மாற்றியமைக்கப்படவேண்டும். பரந்த, பல நோக்குள்ள கல்வித் திட்டமாய் இருந்தால் மாணவர்களின் கல்வித்தரம் குறையமாட்டாது. ஒரு மாணவனுக்கு எந்தத் துறையில் கூடிய ஆற்றல் இருக்கிறதோ அத்துறையில் அம் மாணவனுக்கு பயிற்சி அளிக்கப்படவேண்டும். ஆசிரியர்கள் சர்வகலாசாலைப் படிப்பாளராய் இருப்பது சிறந்தது.

ஆசிரிய பசிற்சிக்கலாசாலைகள் சர்வகலாசாலையுடன் தொடர்புடையதாயிருக்க வேண்டியது அவசியம்.

திரு. ஏ. எஸ். கனகரத்தினம் தனது கருத்தில் தெரிவித்ததாவது:

''கல்வியின் தரம் குறையவில்லை. ஆசிரியர்களின்கல்வி பயிற்றும் தரம் கூடிய பாடசாலைகளில் கல்விவளர்ச்சிக் கண்டுள்ளது. ஆனால் ஆங்கிலத்தின் தரம்குறைந்திருக்கிறது இதற்குக்காரணம் சுயபாஷை போதனமொழியாகப்பட்டதே.

இலவசக் கல்வித்திட்டம், அரசாங்கம் பாடசாலைகளை எடுத்து நடத்துதல், ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்களை அரசாங்கம் கண்காணித்தல். ஆசிரியர் உரிமை பறிக்கப்படுதல், இடமாற்றம், மாணவர், இடமாற்றவேதனையால் கவலைப்படும் ஆசிரியர்களை மதியாதிருத்தல், பாடசாலைகளின் தரத்தையும் செல்வாக்கையும் தூரத்தில் இருப்பவர்கள் நிர்வகித்தல் இன்னும் இவைபோன்றபல பிரச்னைகள் கல்வி வளர்ச்சிக்கு குந்தகமாயுள்ளது.

பாடசாலைகளை மாவட்ட சபை மூலம் நிர்வகித்தால் கல்வி வளர்ச்சியடையும்''

கழகத்தலைவர் திரு. எம். கங்காதரம் தலைமையில் சாவகச்சேரிவட்டார வித்தியாதரிசி திரு. கே. கனகசபாபதி தொடக்கவுரையுடன் கருத்தரங்கு ஆரம்பமானது.

---

# யாழ். நூதனசாலையை விஸ்தரிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்


யாழ்ப்பாணம் நூதனசாலையை விஸ்தரித்து நவீன முறையில் அதனைத் திருத்தி அமைக்கவேண்டிய ஒழுங்குகள் செய்யும்படி கலாசார அமைச்சரைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்ற நீர்வேலிக்கிராமசபையின் மாதாந்தக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. யாழ்ப்பாணம் நூதனசாலையை இடமாற்றம்செய்வதற்கு அரசாங்கம் உத்தேசித்திருப்பது குறித்து மேற்படி தீர்மானத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இப்பிரேரணையை திரு. சி. கனகசுந்தரம் கொண்டு வந்தார், திரு. க. குலசிங்கம் அனுவதித்தார்.

இக் கூட்டத்திற்கு திரு. க. குலசிங்கம் தலைமை வகித்தார்.

---

# வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத திருப்பணி நிதி



நன்கொடையை வழங்கினீர்களா வண்ணை வைத்தீஸ்வரன் பஞ்சரதத் திருப்பணிக்கு?

இன்றேல் இன்றே நன்கொடை வழங்கி ஊக்குவித்தல் அடியார் கடமையாகும்.

தனாதிகாரி,
தேர்த் திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.

---

# சின்னமௌலானா இங்கு வருவார்

நல்லூர், வியா.

நாதசுர மேதை சின்ன மௌலானா சாகிப் இம் மாதம் 30-ம் திகதி யாழ்ப்பாணம் வரக்கூடுமென்று எதிர்பார்க்கப் படுகிறது. யாழ்ப்பாணத்தில் அவர் பல நாதசுரக் கச்சேரிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் அறியப்படுகின்றது.

## பலருக்கு 'பர்மிட்' கிடைக்கலாம்

இந்தியாவிலிருந்து நாதசுர, தவில்க் கலைஞர்கள் பலரை வரவழைப்பதற்கான 'பர்மிட்' விரைவில் வழங்கப்பட விருக்கின்றது. திறமையான கலைஞர்கள் பலரையும் வருவிக்க யாழ்ப்பாணத்திலுள்ள பல நாதசுர, தவில் கலைஞர்கள் 'பர்மிட்' கோரியதனைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணம் பிரதேச கலாமன்றம் இந்தியக் கலைஞர்களை வரவழைக்கும் யோசனைக்கு சிபாரிசு செய்திருப்பதுடன் பல பாராளுமன்ற உறுப்பினர்களும் இவ்விஷயத்தில் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இம் மாத இறுதியில் பலருக்கு 'பர்மிட்' வழங்குவது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது அடுத்த மாத முற்பகுதியில் இந்தியக் கலைஞர்கள் பலர் யாழ்ப்பாணம் வந்து சேர்வார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

---

# வல்வெட்டித்துறை பட்டினசபைத்தேர்தல்

## ஜூன் 1-ல் நடைபெறும்

வல்வெட்டித்துறை, வியாழன்

அவசரகால சட்டத்தையொட்டி ஒத்திவைக்கப்பட்டிருந்த வல்வெட்டித்துறை பட்டின சபைத் தேர்தல் அடுத்தமாதம் முதலாம் தேதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் உதவி தேர்தல் அதிகாரி இதனை அறிவித்துள்ளார்.

இந்த [illegible] வல்வெட்டித் துறைப்பட்டின சபையின் தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் ஆதரவு தேடும் வேட்டையில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

---

# ஆசிரியருக்கு அஞ்சலி

வல்வெட்டித்துறை, வியா.

விசேட ஆற்றல் பல வாய்ந்தவராயும் கலையார்வம் மிக்க நன்மாணவரில் ஒருவராகவும் விளங்கினார் அண்மையில் அரனடி அமைந்த ஆசிரியர் இரத்தினசிங்கம்'' காலம் சென்ற இரத்தினசிங்கம் ஆசிரியரின் ஞாபகார்த்தக் கூட்டத்திற்கு தலைமை வகித்த இளைபாறிய தலைமை ஆசிரியர் திரு. வ. ஆறுமுகம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்: வாலிபப் பராயத்தில் சைவ வளர்ச்சிக்கும், தமிழ் வளர்ச்சிக்கும் அரும்பாடு பட்டு உழைத்தவர். விகடப் பேச்சிலும், புராணப் படிப்பிலும் திறமை படைத்தவர். இவரது இழப்பு தமிழுக்கும் தமிழுலகுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் என்றார்.

திருவாளர்கள் நமசிவாயகம்பிள்ளை, சு. கணபதிப்பிள்ளை ஆகியோர் பேசிய பின்னர் இரத்தினசிங்கம் ஆசிரியரின் நினைவுமலர் திரு. கா. மயில்வாகனத்தால் வழங்கப்பட்டது.

---

# சிரமதானத்தில் நெசவு நிலையம்

அல்லைப்பிட்டி, வியாழன்

அல்லைப்பிட்டி கிராம முன்னேற்றச்சங்கத்தின் முயற்சியால் உருவாகி வரும் நெசவுநிலையத்துக்கு சுமார் ஒன்பதினாயிரம் ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தொகையில் ஆறாயிரம்ரூபாவை அரசினர் வழங்குவதாகஒப்புக்கொண்டுள்ளனர்.

பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு கிராம முன்னேற்றச் சங்க அங்கத்தவர்களும், பொதுமக்களும் சிரமதான முறையில் வேலையில் ஈடுபட்டுள்ளனர். அல்லைப்பிட்டி கிராமசேவகர் திரு. வை. கா. தளையசிங்கம் தலைமையில் தினம் ஏராளமானோர் இச்சிரமதான இயக்கத்தில் கலந்துகொள்கின்றனர்.

---

# கொள்கை பற்றி ஸ்தானிகர்

பேருவளை, வியாழன்

இவ்வுலகத்தில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய முறையில் ஒரு கருத்தையோ அன்றேல் ஒரு கொள்கையையோ நாம் ஏற்படுத்தமுடியாது. எங்களுடைய கொள்கைகளைக் கூடச் சிலர் கண்டிக்கின்றனர். என்று அமெரிக்காவின் இலங்கை ஸ்தானிகர் திரு. சிசில் பி. லெயோன் பேருவளை மங்கள பிரிவினுவின் பொன்விழாக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

---

# ரூபா 46,000 களவு

## குமாஸ்தாவிற்கு றிமான்ட்

களுத்துறை, வியாழன்

களுத்துறை றப்பர்தோட்டமொன்றில் வேலை செய்யும் குமாஸ்தா ஒருவர் தோட்ட கந்தோரிலிருந்து ரூபா 46,000 களவுபோனது சம்பந்தமாக களுத்துறை நீதிபதியால்இம்மாதம்30-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# கெருடாவில் காளியம்பாள் உற்சவம்

வல்வெட்டித்துறை, வியாழன்

தொண்டாமானாறு கெருடாவிலுள்ள வீரமாகாளியம்பாள் வருடாந்த உற்சவம் இம்மாதம் 19-ம் திகதி ஆரம்பமாகி அடுத்தமாதம் 2, 3-ந் திகதிகளில் தேர், தீர்த்தோற்சவத்துடன் முடிவடைகிறது.

---

# யாழ்ப்பாணத்தில் சேக்கிழார் விழா

## இம்மாதம் 25, 26ல் நடைபெறும்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கை சேக்கிழார் மன்றத்தின் ஆதரவில் இம்மாதம் 25ம், 26ம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் சேக்கிழார்விழா நடைபெற இருக்கிறது.

முதல்நாள் விழாவின்காலை நிகழ்ச்சிகள் இந்துக்கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறும். முற்பகல் நிகழ்ச்சியாக சேக்கிழார் குருபூஜை இடம்பெறும்.

மாலைஇந்துக்கல்லூரிகுமாரசுவாமி மண்டபத்தில் சேக்கிழார் விழா மன்றத் தலைவர் திரு.ம. ஸ்ரீகாந்தா தலைமையில் நடைபெறும். திரு, வி.க. ஆறுமுகத்தின் தேவாரத்துடன் ஆரம்பமாகும் மாலை நிகழ்ச்சியில் வித்துவான் பொன் முத்துக்குமாரன், பண்டிதர் வி.சி. கந்தையா, திரு க. சிவராமலிங்கம், வித்துவான் க. வேந்தனார், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் சொற்பொழி வாற்றுவர். கருத்தரங்கத்துக்கு வித்துவான் க. கார்த்திகேசு தலைமைவகிப்பார்.

இரவு விசேஷ நிகழச்சியாக அண்ணாமலைப்பல்கலைக்கழக ஆராய்ச்சித்துறை துணைப்பேராசிரியர் வித்துவான் க. வெள்ளைவாரணனார் சேக்கிழார் வளர்த்த செந்தமிழ்' என்னும் பொருள் பற்றி உரைநிகழ்த்துவார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி மாலை குமாரசுவாமி மண்டபத்தில் ஆரம்பமாகும். கவியரங்கம், சிறப்புச் சொற்பொழிவு, நாடகம் ஆகியன இடம்பெறும். கவியரங்குக்கு பண்டிதர் க. வேந்தனார் தலைமை வகிப்பார். பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் 'திருமுறையும் மெய்கண்ட சாத்திரங்களும் என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றுவார்.

---

# தமிழிசைச்சங்க ஆண்டு நிறைவு விழா

மீசாலை, வியாழன்

மீசாலைகிராம முன்னேற்ற சபை மண்டபத்தில் தமிழிசைச்சங்க ஆண்டு நிறைவு விழா திரு.கு. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

திரு. ஆ. மி. சுப்பிரமணியம் திரு. க. குமாரசுவாமி, திரு. க. கனகரத்தினம், உயர்திரு. பே. செல்லையா, திரு. எம். எஸ். பதஞ்சலி, திரு. ஆ. பரமசாமி, திரு, ஏ. பி. செல்லையா உட்படப்பலர் பேசினர்.

புதுவருட உத்தியோகத்தர்களாகப்பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்கள்: திருவாளர்கள் பே. செல்லையா, வி. என். நவரத்தினம், ஆர். டி. சிவகுரு, எம். எஸ். பதஞ்சலி, தலைவர்: திரு கு. வேலாயுதபிள்ளை, உபதலைவர்கள்: திருவாளர்கள்- ஆர். ரி. சுப்பிரமணியம், சி. செல்லையா. செயலாளர்: திரு. க. குமாரசாமி, உபகாரியதரிசி: திரு. கு. வி. மகாலிங்கம், பொருளாளர்: திரு. க. கி. ஏரம்பமூர்த்தி. ஆறுபேர்கொண்ட நிர்வாகசபையும்நிறுவப்பட்டது.

---

# ஹாம்பர்க் ஹாக்கி போட்டி

ஹாம்பர்க், மே 19

இங்கு நடைபெற்ற சர்வதேச ஹாக்கிப் போட்டித் தொடரில் இந்தியா, ஆஸ்திரியாவை 1—0 கோலினால் தோற்கடித்தது.

பாகிஸ்தானும் போலந்தும் தலா ஒரு கோல் போட்டு வெற்றி தோல்வி நிலையற்றதைப் பெற்றன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

**கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்**

**17-ம் பிரிவின்படியான அறிவித்தல்**

என் 1018- 1961 இன் 60-ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம், 257) 17 (5) ஆம் பிரிவால் எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரப் பலத்தைக் கொண்டு, உள்ளுராட்சி உதவி அதிகாரி, வட பிரதேசம் (மேல்), யாழப்பாணம், சிவசுப்பிரமணியம் சின்மயானந்தகுரு மாணிக்கவாசகர் ஆகிய நான் இதன் அட்டவணை பத்தி I-ல் குறிக்கப்பட்டுள்ள கிராமச் சபையின் கூட்டத்தை அந்த அட்டவணைப் பத்தி II-ல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள திகதியில் அந்த அட்டவணையின் பத்தி III-ல் உள்ள ஏற்ற பதிவில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் அந்த அட்டவணையில் பத்தி IV-ல் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் இத்தால் கூட்டுகிறேன்.

சி. சி. மாணிக்கவாசகர்
உள்ளுராட்சி உதவி அதிகாரி.
வட பிரதேசம் (மேல்)

உள்ளுராட்சிக் கந்தோர்,
வட பிரதேசம் (மேல்) யாழ்ப்பாணம்.

அட்டவணை

| பத்தி. I கிராமசபையின் பெயர். | பத்தி II. திகதி. | பத்தி III. நேரம். | பத்தி IV. இடம். |
|---|---|---|---|
| ஏழாலை | 1-6-66 | 10-00. மு. ப. | கிராமசபை அலுவலகம் ஏழாலை. |

2666

## மாதிரிப்படங்கள்: நீதியரசர் கருத்து

யாழ்ப்பாணம், வியாழன்

நாவற்காடு கொலை வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டபோது, இவ்வழக்கு சம்பந்தப்பட்ட மாதிரிப் படத்தில் திசைகள்சரியாகக் குறிக்கப்படவில்லையென எதிரியின் வழக்கறிஞர் திரு. ஜே. ஏ. பி. செருபிம் நீதியரசரின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

கோர்ட்டில் விசாரணைக்கு உதவியாக இப்படம் இருக்கவில்லையெனக் கூறிய நீதியரசர், திசையறிகருவியையே முறையாகப் படியாதவர்களைப் படம் வரையவிடுவதால் உள்ள நஷ்டம் இதுஎனத் தெரிவித்தார்.

நீதியரசர் இதுபற்றி மேலும் கூறும்போது, தாம் இதுபற்றி முன்பு முறைப்பாடு செய்ததாகவும் ஆனால் கவனம் செலுத்தப்படவில்லையென்றும் கூறினார்.

இங்கிலாந்திலும் மற்ற நாடுகளிலும் தாராதரமுள்ள உலாந்தாக்காரர்களைக் கொண்டுதான் இப்படியான படங்களை வரையச் செய்வார்கள் என்றும், ஆனால் இங்கே இந்தவிதமாக நடப்பது கவலைக்குரியதென்றும், நீதியரசர் குறிப்பிட்டார்.

### இந்திய தேர்தல்

## அண்ணா கண்டனம்

சென்னை.

ஸ்ரீ காமராஜ் ஆட்சேபகரமாகவும் விசித்திரமான வகையிலும் தேர்தல் பிரசாரம் நடத்துவதாக தி. மு. க. தலைவர் திரு. சி. என். அண்ணாதுரை ஓர் அறிக்கையில் கூறுகிறார். ''ஒரு தமிழர் காங்கிரஸ் கட்சிக்குத் தலைமை வகிப்பது பெருமைதான். ஆனால் அதற்காக அவர் இழுத்த இழுப்புக்கெல்லாம் போக மக்கள் இனித்தயாராயில்லை'' என்று திரு. அண்ணாதுரை கூறுகிறார்.

## காங்கிரஸ் விஞ்ஞாபனம்

காங்கிரஸ் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் இந்தவருஷம் செப்டம்பர் மாதத்தில் அவுரங்காபாத்தில் நடைபெறவிருக்கும் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் வெளியிடப்படும் என்ற தகவலை திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தெரிவித்துள்ளார்.

## தி. மு. க. பிரசாரம்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் பிரசாரம் ஜூன் மாதம் முதல் வாரத்தில் திருச்சியில்கூடும் முதல் மகாநாட்டில் ஆரம்பமாகும். தமிழ் நாடு சட்டசபையின் 234 தொகுதிகளில் குறைந்தது 200 தொகுதிகளில் தி. மு. க போட்டியிடும்.

### ஆங்கில-தமிழ்

## வியாசப்போட்டி முடிவுகள்

வல்வெட்டித்துறை, வியா

வடமராட்சி ஆசிரிய சங்கத்தினால் கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் நடத்தப்பட்ட ஆங்கில-தமிழ் வியாசப்போட்டி முடிவுகள் பின்வருமாறு:

ஆங்கிலப்போட்டி முடிவுகள்:

மத்தியபிரிவு: வி. சத்தியசீலன், ஏ. சிவேந்திரராணி, (உயர்தர பெண்பாடசாலை, பருத்தித்துறை) எஸ். ஜெயசுந்தரம் (ஹாட்லிக்கல்லூரி பருத்தித்துறை)

மேற்பிரிவு: வி. சொர்ணலிங்கம், எஸ். வசந்தன், எம். ஸ்ரீதரன் (ஹாட்லிக்கல்லூரி பருத்தித்துறை).

அதிமேற்பிரிவு: எல். சபாரத்தினம், ஜே. தம்பாப்பிள்ளை, பி. அருளம்பலம், (ஹாட்லிகல்லூரி பருத்தித்துறை.

தமிழ்ப்போட்டி முடிவுகள்:

மத்தியபிரிவு: பி. சத்தியகிரி (ஹாட்லிகல்லூரி, பருத்தித்துறை), எஸ் மோகனதாஸ், பி. சுப்பிரமணியம் (சிதம்பராக்கல்லூரி வல்வெட்டித்துறை).

மேற்பிரிவு: கே. விக்கிரமபாஸ்கரன் (ஹாட்லிக்கல்லூரி பருத்தித்துறை), ரி. யோகசபாபதிப்பிள்ளை சிதம்பராக்கல்லூரி வல்வெட்டித்துறை), எஸ். மகேந்திரராசா (விக்னேஸ்வராக் கல்லூரி கரவெட்டி).

அதிமேற்பிரிவு: வி. இளையதம்பி (ஹாட்லிகல்லூரி வல்வெட்டித்துறை), என். சிவசுப்பிரமணியம் (விக்கினேஸ்வராக்கல்லூரி கரவெட்டி).

## அராலியில் புதுமுறைத் திருட்டு

யாழ்ப்பாணம், வெள்ளி

ஆண்களில்லாத சமயம் பார்த்து வீடுகளுக்குள் புகுந்து திருட்டு நடாத்தப்பட்ட சம்பவம் அராலியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்றுவிளது.

இந்தத் திருட்டுகளை நடாத்தியவர்கள் எவருமே பொலிஸார் கையில் இன்னமும் சிக்கிக்கொள்ளவில்லை. அதே ஊரைச் சேர்ந்தவர்கள் இத்திருட்டை நடாத்தியிருக்கலாமெனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

அராலியில் அன்றைய தினம் இ போ ச பையைச் சேர்ந்த என்ஜினியர் வீட்டிலும் ரொக்கப்பணமும் பொருட்களும் களவு போயுள்ளன.

யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. தளையசிங்கம், காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் வியனகே, யாழ்ப்பாணம் குற்றப்பிரிவு உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. தவராசா ஆகியோர் களவு நடந்த வீடுகளைச் சென்று பார்வையிட்டனர். இப்பகுதியில் பொலிஸார் ரோந்துசுற்றி வருகின்றனர். (நி. நி.)

## பிரிவுபசாரம்

திருக்கேதீஸ்வரம், வியா.

மாந்தைப் பிரிவில் பல வருடங்களாக காரியாதிகாரியாகக் கடமையாற்றி தற்பொழுது மன்னார் கச்சேரியில் தலைமைக் காரியாதிகாரியாக பதவியேற்றிருக்கும் திரு. த. வாமதேவனுக்கு மாந்தைப்பிரிவு அரசாங்க ஊழியர்களால் ஓர் பிரிவுபசார வைபவம் காரியாதிகாரியின் காரியாலயத்தில் நடைபெற்றது. அவரின் சேவைகளைப் பாராட்டி திருவாளர்கள் வ. க. சாம்பசிவம், கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திரு. கே. சி. பேக்மன்ஸ் ஆகியோர் பேசினர்.

## ஜயாறன்

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

றும் தெரிவித்திருக்கிறார். இதைப் படித்த பின்பே, ''பாதி மதிநதி போது மணி சடை...'' என்ற திருப்புகழும், ''சந்திரார்த்த சூடம் சசிவர்ண தேகம்...'' என்ற சுலோகமும் நினைப்பு வந்து, சிவபெருமான் முடியில் வைத்திருப்பது அட்டமிச் சந்திரன் என்பது எனக்கு நிச்சயமாயிற்று.

இரு அட்டமிகளையும் போயா (பூஜா) நாட்களாக ஏன் விடுமுறைவிட்டிருக்கிறார்கள் என்ற பல நாள் சந்தேகமும் இதனால் தீருவதாகவுள்ளது. அட்டமி நவமி என்றால் சுப காரியங்களுக்குக் கூடாத நாள் என்றே நாம் பொதுவாகக் கருதுகிறோம். காரணம் தெரியவில்லை. ஆனால் வழிபாட்டுக்கு மிகப்புனித நாளென்றே, வேறுகாரியங்களுக்குக் கூடாதென்றும், பூஜை வழிபாடுகளுக்கே ஒதுக்கவேண்டுமென்று செய்துள்ளனர் போலும்! இந்துக்களின் பழைய முறைகளையே பௌத்தர்கள் இவ்விஷயங்களில் பின்பற்றுவதாக மகாநாயகா தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஃ ஃ ஃ

பொன்னியலுந் திருமேனி உடையான் கண்டாய் பூங்கொன்றைத் தாரொன்றணிந்தான் கண்டாய், மின்னியலும் வார் சடையம் பெருமான்கண்டாய் வேழத்தின் உரிவிரும்பிப் போர்த்தான் கண்டாய், தன்னியல்பார் மற்றொருவரில்லான் கண்டாய் தாங்கரிய சிவந்தானாய் நின்றான் கண்டாய், மன்னிய மங்கையோர் கூறன் கண்டாய் மழபாடி மன்னும் மணாளன்றானே

— அப்பர்சுவாமிகள்.

## கி. மு. சங்க புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர் வடக்கு கிராம முன்னேற்றச்சங்கத்தின் பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் காரியாதிகாரி திரு. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் நடப்புவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. பொ. நவரத்தினசிங்கம், உபதலைவர்: திரு. மு. ஆலாலசுந்தரம், காரியதரிசி: திரு. ச. இராசலிங்கம், உபகாரியதரிசி: திரு. என். கே. குலசிங்கம். தனாதிகாரி: திரு. த. கோபாலரத்தினம், உபதனாதிகாரி: திரு. சு கைலாயநாதன். பன்னிரண்டு பேர் நிர்வாகசபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

## வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு வரவேற்பு

குருநாகல், வியாழன்

'பிறநாடுகளிலிருந்துஇலங்கைக்கு வருகை தந்த பிரதிநிதிகள் இந்த நாட்டின் கலாச்சாரத்தையும் கல்வியையும் வளர்ப்பதற்கு வழிவகுத்துள்ளார்கள்' என்று நிதிமந்திரி திரு. யூ. பி. வன்னிநாயக்கா வெளிநாட்டு பௌத்த பிரதிநிதிகளுக்கு குருநாகலையில் அளிக்கப்பட்ட வரவேற்பொன்றில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

**S. R. S.**
**ஜவுளிமாளிகையில்**
**C. W. E.**
**பிடவைகளும்**
மலிவு விலைகளில்
**வயில் சேலைகளும்**
ஏராளமாக உண்டு.

எஸ். ஆர். செல்லத்துரை,
216, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 296

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி
3-30, 6-30, 9-30
**WILD HARVEST**

**REGAL--JAFFNA**
NOW SHOWING!
Joan Sims
in
**NURSE on WHEELS**

## வரிவிளம்பரம்

### தேவை

வேலையாட்கள்

மசகிடும் சேவையில் (சேர்விஸ் ஸ்ரேசனில் வேலை செய்து) அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை. நேர்முகமாகச் சமுகமளிக்கவும். லிங்கோ லுப்பிறிக்கேசன் சேர்விஸ், பலாலி வீதி, கோண்டாவில். 369

### விற்பனைக்கு

மோட்டர்.....

நல்ல நிலைமையிலுள்ள 7-ம் நம்பர் இந்தியன் 'ஹல்லரும்'; 10 அங்குல இங்கிலிஷ் கிரைண்டரும்; 12 அங்குல இங்கிலீஷ் கிரைன்டரும்; 7 1/2 'ஹோஸ் பவர்' மோட்டரும்; ஸ்ராட்டரும்; பெல்டுகளும் விற்பனைக்குண்டு. த. இராசரத்தினம், 72, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 368


கார்

நல்ல நிலைமையிலுள்ள EY பின்பகுதி செவளெற் டீலக்ஸ் மொடல் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். கே. வேலும்மயிலும், டிஸ்பென்சரி ரோட், வல்வெட்டித்துறை. 327

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி2-30, 6-30, 9-45க்கு
சிவாஜி—சாவித்திரி
நடித்த
**அமரதீபம்**

கடைசி வாரம்!

**சிங்ஸ்லி** (கொழும்பு) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) **விஜயா** (அம்பாறை)



**சிவாஜி கணேசன் - சாவித்திரி**
(9 மாறுபட்ட வேடங்களில்)
மற்றும் பலர் நடித்திருக்கும்
**நவராத்திரி**

24-ந் திகதி முதல்
சிங்ஸ்லி பிளாஸா நவா
வெலிங்டன் விஜயா
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
**தெய்வத்தாய்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபகுதி அசைஸ விசாரணை

# 'கண்டகோடாரியால் எதிரி கழுத்தில் வெட்டினர்''

## நாவற்காடு கொலைவழக்கு விசாரணை

## ஸ்தலத்திற்கு கோர்ட்டார் விஜயம்

யாழ்ப்பாணம், வெள்.

''எனது மச்சான் இராசையாவை, எதிரி சபாபதிப்பிள்ளை கண்டகோடரியால் கழுத்தில் வெட்டுவதைக் கண்டேன்.

நாவற்காடு கொலை வழக்கில் சாட்சியமளித்த முருகேசு வேலுப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா கியூ. ஸி. முன்னிலையில் நேற்றுக்காலை விசாரணைசெய்யப்பட்டது.

இவ்வழக்கில், 1964-ம் ஆண்டு டிசம்பர் 1-ம் தேதி நாவற்காடு என்ற இடத்தில், கந்தையா சபாபதிப்பிள்ளை கணவதியார் இராசையா என்பவரைக்கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில் அட்வகேட் ஜே. ஏ. பி. செருபிம், அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதனின் உதவியுடனும் திருவாளர்கள் ஏ. ரி. ஜி. பிரிட்டோ, வி. செல்லத்தம்பி ஆகியோரின் அனுசரணியுடன் ஆஜரானுர்.

முருகேசு வேலுப்பிள்ளை சாட்சியமளித்தபோது கூறியதாவது: இறந்தவர் எனது மைத்துனர். சம்பவம் நடந்ததினம் மாலை 6-30 மணிக்கு நான் சாப்பிட்டுக்கொண்டிருந்தேன் அப்பொழுது என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார்கள், அந்த நேரம் குரலைமட்டுக் கட்டினேன். அது நாகமணி சின்னத்தம்பியின் குரல். அவர் எனது மாமா. நான் எழுந்து முற்றத்திற்கு வந்தேன். சின்னத்தம்பியுடன், சபாபதிப்பிள்ளை, கந்தையா நல்லதம்பிஆகியோரும் வந்திருந்தனர்.

அப்பொழுது எனது தகப்பனுரும், காலஞ்சென்ற இராசையாவும் 'என்னடா சத்தம்' என்று கூறியபடி வந்தார்கள். இறந்தவர் தகப்பனுரின் வீட்டில்தான் வசித்து வந்தார் சத்தத்தைக் கேட்டதும் நான்கு பேரும் போய்விட்டார்கள். நான் அவர்களைத் தொடர்ந்து சென்றேன்.

எனது மச்சான் இராசையாவை எதிரி, கண்டகோடரியால் கழுத்தில் வெட்டுவதைக் கண்டேன்' சம்பவத்தை பாரப்பதற்கு போதிய வெளிச்சம் இருந்தது. காலஞ்சென்றவர் உடனே விழுந்து விட்டார். நான் ஓடிச்சென்று அவரைத் தூக்கினேன் காயத்திலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. ஈரச்சீலையால் காயத்தைக் கட்டியபின் கிராம சேவையாளர் வீட்டிற்குச் சென்று வாக்கு மூலம் அளித்தேன். அதன்பின் பொலிஸாருக்கும், மறுநாள் ஸ்தலத்தில் மாஜிஸ்டிரேட்டுக்கும் வாக்குமூலமளித்தேன்.

எதிரியின் வழக்கறிஞர் திரு. ஜே. ஏ. பி, செருபிம், சாட்சியைக் குறுக்கு விசாரணைசெய்தார்.

நேற்றுக்காலை11-30 மணிக்கு, நீதியரசர், முடிக்குரிய வழக்கறிஞர், எதிரியின் வழக்கறிஞர்கள், ஜூரி சபையினர், பொலிஸார், சாட்சி ஆகியோர் சம்பவம் நடந்த இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டனர்.

விசாரணை இன்று காலை 9-15 மணிக்கு தொடர்ந்து நடைபெறும்.

## கோர்ட்டுக்கு வராதீர்!

யாழ்ப்பாணம், வெள்ளி

வடபகுதி அசைஸ் விசாரணையைப் பார்க்க வந்த ஒருவர் நேற்றுக்காலை நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யூ. தம்பையா கியூ. சி. யின் உத்தரவினுல் வெளியேற்றப்பட்டார்.

விசாரணை நடைபெறும் ஒவ்வொருநாளும், அவரைக் காண்பதாகவும், அவர் ஒரு வழக்குத் தரகர் எனச் சந்தேகிப்பதாகவும், பொலிசாரைக் கண்காணிக்கும்படியும் அவரை வெளியேற்றும்போது தெரிவித்தார்.

நேற்றுக்காலை 9-15 மணிக்கு வடபகுதி அசைஸ் நீதிமன்றம் கூடியபொழுது, எதிரியின் கூண்டிற்கு அருகில் உள்ள கதிரையில் அமர்ந்திருந்த ஒருவரை நீதியரசர் எதற்காக வந்திருக்கிறீர்? என்று கேட்டபொழுது, 'பார்க்க வந்திருக்கிறேன்' என்ருர். என்னவேலை செய்கிறீர்? என்று நீதியரசர் மீண்டும் கேட்டபொழுது ஒன்றுமில்லையெனத்தெரிவித்தார். உடனே அவரை வெளியில் செல்லுமாறு உத்தரவிட்டு, அசைஸ் விசாரணை முடியும்வரை அங்கு வரக்கூடாதென்றும் தெரிவித்தார்.

---

கோயில் தேவைகளுக்கும் விவாகம் முதலிய
விசேஷ வைபவங்களுக்கும் உபயோகமான
அபிஷேக சந்தனம்
கோயில் அபிஷேக திரவியங்கள்,
வாசனை மிக்க பன்னீர்
பரிமளம் நிறைந்த சந்தன வில்லைகள்
விளைவுதூடம்
கிடைக்குமிடம்:
சுந்தரம் பிறதர்ஸ்.
(மருந்துச்சரக்கு வியாபாரம்)
73, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.

## பஸ் மோதி மரணம்

### சாரதிக்கு ரிமாண்ட்

மாவிட்டபுரம், வியா.

ஏழாலை வடக்கைச் சேர்ந்தவரும் புன்னலைக்கட்டுவன் அ. மி. பாடசாலை தலைமையாசிரியருமான செல்லப்பா சாமுவேல் வைரவநாதன் நேற்று யாழப்பாணம் ஆஸ்பத்திரியில் மரணமானது சம்பந்தமாக மல்லாகம் பதில் நீதிபதி திரு, ஜி. வி. பாலசிங்கம் நேற்றும் இன்றும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலும், சம்பவம் நடைபெற்ற இடத்திலும் மரண விசாரணை நடத்தினுர். சுன்னுகம் பொலிஸ் குற்றப்பிரிவு சார்ஜண்ட் திரு. கிருஷ்ணராசாவின் உதவியுடன் இன்ஸ்பெக்டர் திரு. பேர்ஸிவீரசூரியா சாட்சிகளை ஆஜர்செய்தார்.

மரணவிசாரணையில் காலம்சென்றவர் கடந்த 13-ந் திகதி இரவு மல்லாகம் புன்னலைக்கட்டுவன் ரேட்டால் வீடு நோக்கிச் செல்லுகையில் எதிர்முகமாக வந்த பஸ்ஸினுல் மோதுண்டு அறிவு மயங்கியநிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு நேற்று மாலை மரணமானதாகக் கூறப்பட்டது. யாழ்ப்பாணம் சட்ட வைத்தியஅதிகாரி டாக்டர் எம். சுப்பிரமணியம் பிரேத பரிசோதனை நடத்தினுர் நீதிபதி மரணவிசாரணையின்பின் பொலிசாரை மேற்கொண்டு புலன்விசாரணை நடத்தும்படியும் சம்பந்தப்பட்ட பஸ் சாரதியான சபாபதி தம்பித்துரையை இம்மாதம் 24-ம் திகதிவரை ரிமாண்டில் வைக்கும்படியும் உத்தரவிட்டு அத் திகதிக்குமேல் விசாரணையை ஒத்திவைத்தார்

## வடக்கு, கிழக்கு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமக்குத் தேவையான வள்ளங்கள், வலைகள் போன்ற சாதனங்களை வாங்குவதற்காக புதிய கடன்கள் வழங்குவதுபற்றி ஆலோசிக்கும்படியும் கூட்டுத்தாபனத் தலைவரை மேற்படி எம் பிக்கள் இருவரும் கேட்டுள்ளனர்

### மீன்பிடித்துறை முகம்

வடபகுதியில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றை விருத்திசெய்து சீரமைப்பது குறித்தும் இவர்கள் ஆலோசனைகள் தெரிவித்துள்ளனர்

எம் பிக்கள் தெவிரித்த கருத்துக்களைக் கேட்டு அவர்களுடன் கருத்துப்பரிமாறல் செய்துகொண்ட திரு ராஜரத்ன அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு தம்மால் முடிந்தஅளவு நடவடிக்கைகள் மேற்கொள்வதாக வாக்களித்துள்ளார் என்றும் தெரிகின்றது

## சரித்திர . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டியக் கலையைப்பற்றிய நல்ல விளக்கங்களைக்கொடுக்காமல் பிழைப்பாகவே அந்தக் கலையை இங்குஉபயோகித்து வருகிருர்கள். இந்நிலைமைமாறவேண்டும்.

வித்துவான் பொன். முத்துக்குமாரனும் உரைநிகழ்த்தினுர். (நாளைய பதிப்பில் இவர் பேச்சு விபரம் வெளிவரும்.)

வண்ணை வைத்தீஸ்வரா கல்லூரி அதிபர் திரு. அம்பிகைபாகன் வரவேற்புரை நிகழ்த்தினுர்.

### கூட்டுப்பிரார்த்தனை

இன்று வண்ணைவைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் கூட்டுப் பிரார்த்தனையும் விசேஷ அம்மன் பூஜையும் தேவார பாராயணமும் ஆறுமுகத்தின் சகாப்பிரசங்கமும் அதனைத்தொடர்ந்து பூசையும் திருக்கார்த்திகை உற்சவமும் நிறைவேறும்

# துணி இறக்குமதி வர்த்தகத்தை அரசாங்கமே நடத்தும்

## தனியார் துறையினரின் 'கோட்டா'க்கள் ரத்து செய்யப்படும்

கொழும்பு, வியாழன்

455 தனிப்பட்ட ஜவுளி வர்த்தகர்களின் இறக்குமதி கோட்டாக்களை ஜுலை மாதத்தில் கூட்டுறவு மொத்த விற்பனவு இலாகா பொறுப்பேற்கும். இவ்வர்த்தகர்கள் ங்களுக்கு அளிக்கப்பட்ட இறக்குமதி கோட்டர்வின்படி துணிவகைகளை இறக்குமதி செய்ய அனுமதிககப்பட மாட்டார்கள்.

தனியார் பகுதியில் துணிவகைகள் வர்த்தகர்கள் நடைபெறும் மோசடிகளைத் தவிர்க்குமுகமாகவே இவ்விதம் கோட்டாக்களை கூ மொவிஸ்தாபனம் பொறுப்பேற்கப்போவதாக அரசாங்க அதிகாரியொருவர் 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்தார்.

தற்பொழுது நாட்டுக்கு இறக்குமதியாகும் துணிவகைகளில் 20 சதவிகிதத்தை தனியார்துறை வர்த்தகர்களே இறக்குமதிசெய்கிருர்கள். மிகுதி 80 சதவிகிதத்தையும் கூ. மொ வி. இறக்குமதி செய்கிறது. அனேகமாக ஜுலை மாத முடிவிற்குள் நாட்டின் துணி இறக்குமதி முழுவதையும் கூ மொ வி யே பொறுப்பேற்று நடத்தும் எனவும் அந்த அரசாங்க அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# நியமனக் கடிதங்கள் பற்றி ஆசிரியர் சங்கம் ஆட்சேபம்

வல்வெட்டித்துறை, வியா.

உதவி நன்கொடை பெறும் பாடசாலை ஆசிரியர்களின் நியமனத் திகதியை எந்த வகையிலும் பாதிக்காத வகையில் கடிதங்கள் வழங்கப்பட வேண்டுமென்று வடமராட்சி தமிழாசிரியர் சங்கக் கூட்டத்தில் தீர்மானமொன்று நிறைவேற்றப் பட்டுள்ளது.

வடமராட்சி தமிழாசிரியர் சங்கக் கூட்டம் வடமத்திய ஆங்கில பாடசாலையில் சங்கத் தலைவர் திரு. ஆ. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

அரசாங்க நன்கொடை பெறும் பாடசாலைகளில் 1-12-60-ல் பொறுப்பேற்பதற்கு முன் நிரந்தர சேவையில் கடமையாற்றி வந்த ஆசிரியர்களுக்கு முதல் நியமனமென ஒரு கடிதம் மூலம் நியமனத் திகதியை மாற்றி வருவதோடு நிரந்தர நியமனத்துக்கான சில நிபந்தனைகளை நிறைவேற்றும்படி உத்தரவிடுவது பொருத்தமற்றதாகும். இந்த நிபந்தனை மூலம் நீண்ட சேவையைக் கவனியாது விட்டதோடு, 1956-ம் ஆண்டு மொழிச் சட்டத்துக்கிணங்க சிங்கள மொழியில் தேர்ச்சி பெறவேண்டுமென ஆசிரியர்கள் நிர்பந்திக்கப்படுகிருர்கள்'' என்று இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மேற்படி தீர்மானத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## கச்சதீவு விவகாரம் .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுசம்பந்தமாக யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகராவிடம் விசாரித்தபோது மேலே கூறப்பட்டது உண்மையாயிருக்கலாம் என்று தெரிவித்தார். கள்ளக் கடத்தல், சட்டவிரோதக் குடியேற்றம், தொற்று நோய் பரவுதல் முதலிய விஷயங்களில் இலங்கைக்கே கூடுதலான அக்கறை இருப்பதால் கச்சதீவில் காவல் நிலையங்களை அமைப்பதற்கு இந்தியாவின் சம்மதமும் தேவையென்றும் இதுபற்றி நடவடிக்கை எடுக்குமாறு தாம் தமது அமைச்சைக் கேட்டிருப்பதாகவும் திரு. அபயசேகரா கூறினுர்.

இரு அரசாங்கங்களும் கலந்தாலோசித்து ஒரு முடிவுக்கு வரும்வரையில் கச்சதீவு கள்ளக்கடத்தல்காரருக்கும் சட்டவிரோதக் குடியேற்றம் செய்பவர்களுக்கும் நல்லவேட்டைஅளித்து வரும்.

## ஸ்தாபகர் தினம்

கொழும்பு, வியாழன்

கங்கொடவிலவில் இருக்கும் வித்தியோதய பல்கலைக் கழகத்தின் முன்னைநாள் உபவேந்தர் காலஞ்சென்ற வண. சூரத் நாயக்க தேரோவின் முழு உருவிலான ஒரு சிலையை கவர்னர்ஜெனரல் திரு. வில்லியம்கோபல்லாவ அடுத்த ஞாயிற்றுக்கிழமை திரைநீக்கம் செய்துவைப்பார். இந்த வைபவத்தில் கல்வி மந்திரி திரு. இரியகொல்லையும் கலந்துகொள்வார். மேற்படி கழகத்தின் ஸ்தாபகர் தினத்தையொட்டி இந்த வைபவம் இடம்பெறவிருக்கின்றது.

## இரு சபைகளும் இன்று கூடுகின்றன

கொழும்பு, வெள்ளி

பார்லிமெண்டின் இரு சபைகளும் இன்று கூடவிருக்கின்றன.

மக்கள் பிரதிநிதிகள்சபை இன்று கூடும்போது தேயிலை பிரசாரச்சட்டத்தைத்திருத்துவதற்கான மசோதா விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். தந்தித் தொடர்புகள் சம்பந்தமான மசோதாவும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## மிகப்பழைய சிங்களச் சஞ்சிகை

கொழும்பு, வெள்ளி

இலங்கையின்மிகப்பழைய சிங்களச் சஞ்சிகையான 'ஞானர்த்த பிரதீபய'வின் நூறுவது ஆண்டு விழா ஜூன் 7-ம் திகதி கொண்டாடப்படவிருக்கிறன்றது.

இந்த விழாவை பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா ஆரம்பித்துவைப்பார்.

இந்தச் சஞ்சிகை கத்தோலிக்க அச்சகத்திலுல் வெளியிடப்பட்டுவருகின்றது

## தொழில் மந்திரி யாழ்ப்பாணம் விஜயம்

யாழ்ப்பாணம், வெள்ளி

இம்மாதம் 24-ம் திகதியன்று தொழில் வீடமைப்பு அமைச்சர் திரு. எம். எச். முகமத் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவிருக்கிருர். அப்பொழுது கரையூர் வீடமைப்புத்திட்டத்திற்கான அத்திவாரக்கல்லை அவர் நாட்டுவார்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி [illegible]-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மே மாதம் 20ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org